சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

**OS.19/2018**

25.08.2025

**PW- 1**

**வா.சா.1. நாராயணன், த/பெ. ராகவாச்சாசரியார் என்பவர் இடைக்கால மனு 2/2025 மற்றும் 3/2025 மனுக்கள் 18.07.2025 ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டதன் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி** :-

27.08.2007 ம் ஆண்டு பிரதிவாதி விஜயா, பாலம்மாள் மற்றும் கணேச தேவரிடம் கிரயம் வாங்கினார் என்றால் - அதுபற்றி எனக்கு தெரியாது. விஜயா கிரயம் பெற்ற சொத்தின் நான்கெல்லை விவரத்தில் 60 அடி திட்டச்சாலைக்கு வடக்கு, ராகவாச்சாரியார் புஞ்சை கன்னி வாய்க்காலுக்கு தெற்கு மனை எண். 41 க்கு மேற்கு, மனை எண். 43 க்கு கிழக்கு இதற்குட்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்தது சர்வே எண். 2201 என்றால் - சரிதான். பிரதிவாதி கிரயம் வாங்கிய சொத்தின் சர்வே எண். 2179 என்றால் - சரிதான். அளவுதான் தவறு. என்னுடைய நிலமானது பிரதிவாதி நிலத்திற்கு கீழ் பள்ளத்தில் உள்ளது என்றால் - சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மூலபத்திரத்தில் நிலவியல் வாய்க்கால் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். அந்த வாய்க்கால் தற்போது பூமியில் இல்லை என்றால் - சரிதான். அந்த வாய்க்காலை அகற்றியது யார் என்றால் - தானாக மாறிவிட்டது. நீதிமன்றம் மூலம் ஆணையரை நியமித்து இடத்தை அளந்து பார்த்துள்ளேனா என்றால் - இல்லை. கணேச தேவரும், பாலம்மாளும் சீனிவாச ராவ்விடமிருந்து 09.11.1968 ம் ஆண்டு கிரயம் பெற்ற விவரம் தெரியுமா என்றால் - தெரியாது. அப்போது தாவா சொத்து நிலங்கள் நஞ்சை நிலமாக இருந்தது என்றால் - எனக்கு தெரியாது. பொதுவாக மனைப்பகுதி போடவேண்டும் என்றால் அரசிடமிருந்து நகராட்சியிடமும் அனுமதி பெறவேண்டும் என்றால் - சரிதான். கணேச தேவரும் பாலம்மாளும் அரசாங்கத்திடம் அனுமதி பெற்றுதான் மனைப்பிரிவு போட்டார்கள் என்றால் - சரிதான். பூமியிலிருந்த வாய்க்காலை அழித்துவிட்டு ஆக்கிரமிப்பு செய்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல. அரசாங்கத்திற்கு சொந்தமான வாய்க்காலை நான் தூர்த்துவிட்டேன் என்றால் - தவறாகும். மோசடியாக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் - சரியல்ல.,

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.